பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 28 வெள்ளிக்கிழமை 15.12.2023 அதிர்வு 137

## மேலும் ஒரு வயோதிபர் மயங்கி வீழ்ந்து மரணம்

### யாழில் இரு நாள்களில் மூவர் பரிதாப உயிரிழப்பு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் சைக்கிளில் பயணித்தபோது மயங்கி வீழ்ந்த வயோதிபர் சிகிச்சை பலனின்றி நேற்று 04▶

# மயிலத்தமடுவுக்குச் சென்ற தமிழ் எம்.பிக்களை தடுத்து நிறுத்தி ரகளை செய்த அம்பிட்டிய தேரர்

### பொலிஸாரும் சிங்களக் குடியேற்றவாசிகளுடன் சேர்ந்து அடாவடி






(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, மயிலத்தமடு – மாதவனைப் பகுதிக்குச் சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோரை சிங்களக் குடியேற்றவாசிகள் தடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் கடும் சொற்பிரயோகங்களுடன் அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கால்நடை மேய்ச்சல் தரையான மயிலத்தமடு – மாதவனைப் பகுதியில் மகாவலி அதிகார சபையால் சட்டவிரோத சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 04▶

### மக்களின் கடும் எதிர்ப்பையடுத்து

# கீரிமலை ஜனாதிபதி மாளிகை காணி அளவீடு இடைநிறுத்தம்





(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், கீரிமலைப் பகுதியில் காணி அளவீட்டுக்குச் சென்ற நில அளவைத் திணைக்களத்தினருக்கு எதிராகக் காணி உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் சென்றனர்.

கீரிமலையில் ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதியை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கும் நோக்கில் இன்று அளவீடு செய்யப்படவுள்ளது என்று நேற்று அறிவிக்கப்பட்டிருந்தது. 04▶

## பல பொருள்களின் விலைகளை அதிரடியாகக் குறைத்தது சதொச



லங்கா சதொச நிறுவனம் பல பொருள்களின் விலைகளைக் குறைத்துள்ளது. இந்தவிலைகுறைப்பானது இன்று முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை 04▶

### ஒருவரைக் கொலை செய்யும் நோக்குடன் சென்ற

## 4 பாதாளக் குழு உறுப்பினர்கள் கைக்குண்டுகளுடன் சிக்கினர்



டுபாயைத் தளமாகக் கொண்ட பாதாளஉலகக் குழுத் தலைவர் ஒருவரின் தகவலின் பேரில், தெற்கு அதிவேக வீதியின் 04▶

# ஆமை இறைச்சி வைத்திருந்தவர் யாழ். பாசையூர் பகுதியில் கைது!

யாழ்பாணம் பாசையூர் பகுதியில் ஆமை இறைச்சியுடன் ஒருவர் இன்று (15) கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

6 கிலோ 55 கிராம் நிறையுடைய ஆமை இறைச்சி சந்தேக நபரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் மீட்கப்பட்ட இறைச்சியுடன் ஒப்படைக்கப்பட்டார்.





# திருக்கோணேஸ்வரம் ஆலயத்துக்கு ஆயிரம் கிலோவில் காண்டாமணி!

(எஸ்.கீதபொன்கலன்)

திருக்கோணேஸ்வரம் ஆலயத்துக்கு லண்டனில் ஆயிரம் கிலோ எடையுடைய மிகப் பெரிய காண்டாமணி உருவாக்கப் பட்டுள்ளது.

மகாதேவா ஜெயசீலன் மற்றும் சைவ அன்பர்கள் இணைந்து இப்பணியை நிறைவேற்றியுள்ளனர்.

நவீன முறையில் மின்சாரத்தில் தானாக இயங்கும் வகையில் இந்த மணி உருவாக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மணி கொழும்பு வந்து சேரும் எனவும் தொடர்ந்து அது திருகோணமலைக்கு எடுத்து வரப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# தானாக நீர் வழியும் குழாய் கிணறு !

(கி.வசந்தரூபன்)

வவுனியா, கோமரசன்குளம் பகுதியில் உள்ள குழாய் கிணறு ஒன்றில் இருந்து தானாக நீர் வெளியேறிக் கொண்டிக்கும் காட்சி இன்று (15) பதிவாகியுள்ளது.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வரும் நிலையில் தரைக்கீழ் நீரமட்டம் அதிகரித்துள்ளது. பல பகுதிகளிலும் வெள்ள நீர் தேங்கி நிற்கின்றது.

இந்த நிலையில், வவுனியா, கோமரசன்குளம் பகுதியில் உள்ள குழாய் கிணறு ஒன்றில் இருந்து தானாக தண்ணீர் குழாய் நீர் குழாய் ஊடாக பாய்ந்து வருகின்றது.

நீர் மட்டம் அதிகரித்து ஏற்பட்டுள்ள அதிகரித்த ஊற்று காரணமாகவே இவ்வாறு வெளியேறுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.



# பதினொரு மாதங்களில் 449 யானைகள் உயிரிழப்பு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

இலங்கை வரலாற்றில் இந்த வருடத்தில் அதிகமான யானைகள் உயிரிழுந்துள்ளன என்று வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தகவல் தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு மொத்தமாக 439 யானைகள் உயிரிழந்த நிலையில் இந்த வருடத்தின் டிசெம்பர் முதலாம் திகதி வரையான 11 மாதங்களில் 449 யானைகள் உயிரிழந்துள்ளன.



இந்த வருடத்தில் பொலன்னறுவை வனவிலங்கு வலயத்தில் 96 யானைகளும், அனுராதபுரம் வனவிலங்கு வலயத்தில் 82 யானைகளும் கிழக்கு வனவிலங்கு வலயத்தில் 86 யானைகளும் உயிரிழந்துள்ளன எனவும் இதில் 81 யானைகள் துப்பாக்கிச் சூடு காரணமாக உயிரிழந்துள்ளன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பெண்களுக்கான பாதுகாப்பு இல்லம் திருகோணமலையில் திறந்து வைப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

பெண்களுக்கான பாதுகாப்பு இல்லம் திருகோணமலையில் உத்தியோக பூர்வமாகக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் யூ.எஸ். எயிட், ஸ்கொரி அமைப்புகளுடன் இணைந்து சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்க செயற்பாடு திட்டத்தின் கீழ் இந்த இல்லத்தைத் தரிறந்து வைத்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களைப் பாதுகாத்து வைக்கும் நோக்கில் இந்த இல்லம் அமைக்கப்பட்டு இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் இனங்காணப்பட்ட பிரதான பிரச்சினைகளாக பாலியல் சமத்துவமின்மை, பாலியல் ரீதியான வன்முறைகள், இளம் வயது திருமணம், பாடசாலை இடைவிலகல், இளம் வயது கற்பம்,



போதைப்பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிக அளவில் காணப்படுவதாக இணங் காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாதிக்கப்படும் பெண்களுக்கான தற்காலிக, உடனடி பாதுகாப்பு நிவாரணமாக இந்தப் பாதுகாப்பு இல்லம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.ரத்நாயக்க, திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சமிந்த ஹெட்டியாராச்சி, திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளர் சட்டத்தத்தரணி பிரசாந்தினி உதயகுமார், யூ.எஸ். எயிட் அமைப்பின் ஜெயதேவன் கார்த்திக் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# பௌதிகவியல் பாட செய்முறை பயிற்சி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) உயர்தரப் பிரிவில் பௌதிகவியல் பாட அறிவை மேம்படுத்தும் முகமாக எஸ்.ஈ.எஸ்.ஐ.பி. நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விஞ்ஞான பிரிவு ஆசிரியர்கள், மாணவிகளால் முன்னெடுக்கப்பட்ட "பௌதிகவியல் செய்முறை பயிற்சி முகாம்" உயிரியல் பௌதிக விஞ்ஞான பிரிவு கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இந் நிகழ்வைக் கல்லூரியின் முதல்வர் ஏ.பி நஸ்மியா சனூஸ் ஆரம்பித்து வைத்தார்.

உயர்தர உயிரியல் பௌதிக விஞ்ஞான பிரிவில் காணப்படும் ஆய்வு கூட வளங்களை பயன்படுத்தி ஆசிரியர்களின் வழிகாட்டலில் மாணவிகள் மிக சிறப்பான முறையில் விளக்கமாளித்தனர்.

கல்லூரியின் ஏனைய பிரிவு மாணவர்களும் இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொண்டு பயன் பெறுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதி அதிபர்களான ஹாஜியானி. சமதா மசூது லெவ்வை, ஏ.எச். நதீரா, உதவி அதிபர் என்.டி. நதீகா, உயர்தர விஞ்ஞான பிரிவு ஆசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர்.





# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மேலும் ஒரு...**

உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி, அல்வாயைச் சேர்ந்த வள்ளி சின்னத்தம்பி (வயது 61) எனும் வயோதிபரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 11ஆம் திகதி சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளை வீதியில் திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார்.

மயங்கி வீழ்ந்தவரை வீதியில் சென்றவர்கள் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் – பொன்னாலை மற்றும் பலாலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரண்டு வயோதிபர்கள் திடீரென மயங்கி வீழ்ந்த நிலையில் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**பல பொருள்களின்...**

அமுலில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில்,

01) பால் மா – 10 ரூபாவால் குறைப்பு
02) இறக்குமதி செய்யப்படும் டின் மீன் (425 கிராம்) – 55 ரூபாவால் குறைப்பு
03) உருளைக் கிழக்கு – 15 ரூபாவால் குறைப்பு
04) இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழக்கு – 15 ரூபாவால் குறைப்பு
05) சிவப்பு நாட்டு அரிசி – 08 ரூபாவால் குறைப்பு
06) வெள்ளை நாட்டு அரிசி – 07 ரூபாவால் குறைப்பு
07) கொண்டைக் கடலை – 05 ரூபாவால் குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

**4 பாதாளக் குழு...**

கொட்டாவ வெளியேறும் பகுதிக்கு அருகில் வைத்து நான்கு பேர் கைது செய்யப்பட்டனர் என்று ஹோமாகம தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் இருந்து இரண்டு கைக்குண்டுகள் மற்றும் கிட்டத்தட்ட ஐம்பது கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொஸ்கொட சுஜீயின் நெருங்கிய உறவினரைக் கொலை செய்யும் நோக்குடன் மீகொட பிரதேசத்துக்குச் சென்ற போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு ஒருவரையொருவர் அறிமுகம் இல்லை எனவும், டுபாயில் உள்ள பாதாள உலகத் தலைவரின் தகவலுக்கு அமைய சந்தேகநபர்கள் வந்த வானின் சாரதி ஒவ்வொரு இடத்திலிருந்தும் உரிய நபர்களை வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொலையை நடத்திய பின்னர் சந்தேகநபர்கள் பிரதேசத்தில் உள்ள நிதி நிறுவனமொன்றில் கொள்ளையிடவும் திட்டம் தீட்டியிருந்தமை தெரியவந்துள்ளது எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

**கீரிமலை...**

இந்நிலையில், இன்று காலை அங்கு ஒன்றுகூடிய காணி உரிமையாளர்கள் நில அளவைத் திணைக்களத்தினரின் வாகனத்தை மறித்துக் கோஷங்களை எழுப்பினர். இதன்போது அப்பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டனர். காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்களின் கடும் எதிர்ப்பையடுத்து நில அளவைத் திணைக்களத்தினர் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள நகுலேஸ்வரம் (ஜே/226), காங்கேசன்துறை (ஜே/233) கிராம சேவகர் பிரிவுகளில் 29 ஏக்கர் நிலம் அளவீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆழ்வான்மலையடி, வேலர்காடு, புண்ணன்புதுக்காடு, பத்திராயான் மற்றும் புதுக்காடு, சோலைசேனாதிராயன் என அழைக்கப்படும் பகுதிகளிலேயே இந்த நில அளவீடு இன்று முதல் தொடர்ச்சியாக இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

**மயிலத்தமடுவுக்கு...**

சட்டவிரோத குடியேற்றவாசிகளை அப்புறப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், நீதிமன்றமும் கட்டளையிட்டும், சட்டவிரோத குடியேற்றவாசிகள் அங்கிருந்து நகரவில்லை.

குறிப்பிட்ட பகுதிக்கு மாடுகளை மேய்ச்சலுக்குக் கொண்டு செல்வதில் உள்ள சவால்களைச் சுட்டிக்காட்டி, பண்ணையாளர்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தலும் ஈடுபட்டுள்ளனர்.

மேய்ச்சல் தரை உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்களின் மாடுகளை இலக்கு வைத்து சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்களும் பதிவாகி வருகின்றன.

இந்தப் பின்னணியில் இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் மயிலத்தமடு – மாதவனைப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

அவர்களின் பயணம் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த போதும், முன்கூட்டியே தகவலறிந்த சிங்கள சட்டவிரோத குடியேற்றவாசிகள் வளமண்டி பாலத்தில் வீதித் தடைகளை ஏற்படுத்தி, பாலத்தை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அம்பிட்டிய சுமண ரத்ன தேரர், அங்கு வந்து கடும்போக்கில் நடந்து கொண்டார். நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகங்களுடன் பேசிக் கொண்டிருந்த போது, கத்திக் கூச்சலிட்டு ரகளையில் ஈடுபட்டார்.

இதையடுத்து, கஜேந்திரகுமார் தரப்பினர் மேற்கொண்டு நகராமல் பொலிஸார் தடையேற்படுத்தியிருந்தனர்.

இந்தப் பயணத்துக்கு முன்னதாக, மயிலத்தமடுவுக்குச் செல்வதற்குக் கரடியனாறு பொலிஸாரிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று அனுமதி கோரியிருந்தனர். அதற்கு, கரடியனாறு பொலிஸார் மறுப்புத் தெரிவித்தனர். இதையடுத்து, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்றே, ஜனாதிபதி செயலாளரைத் தொடர்பு கொண்டு விடயத்தைத் தெரிவித்தார். இந்த நாட்டில் யாரும் எங்கும் செல்வதற்கு அனுமதியுண்டு என்றும், நீங்கள் மயிலத்தமடு செல்லலாம் என்றும் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, பொலிஸ் உயர்மட்டத்திலிருந்தும் இதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும், இன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பினர் மயிலத்தமடு சென்ற போது, பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டார். ஜனாதிபதி கடந்த ஒக்டோபரில் எடுத்த தீர்மானத்தின்படி யாரும் அங்கு செல்ல முடியாது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதையடுத்து, கஜேந்திரகுமார் ஜனாதிபதி செயலாளரைத் தொடர்பு கொண்டு விடயத்தைத் தெரிவித்தார். யாரும் உங்களை மறிக்க முடியாது எனத் தெரிவித்த ஜனாதிபதி செயலாளர், உரிய தரப்பினரைத் தொடர்பு கொண்டு விட்டு, மீள அழைப்பதாக தெரிவித்திருந்தார். எனினும், அவர் மீண்டும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு அழைப்பேற்படுத்தவில்லை. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பலமுறை அழைத்த போதும், பதிலளிக்கவில்லை.

சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் வரை அங்க காத்திருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பினர், மீண்டும் திரும்பி வந்தனர்.





# நெற்செய்கையில் ஏற்படும் நோய்த் தாக்கம்; தம்பலகாமம் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு!

(ஹஸ்பர்)

நெற் செய்கையின் போது ஏற்படும் நோய்த் தாக்கமும் அதனைக் கட்டுப்ப டுத்தும் வழி முறைகள் தொடர்பான விழிப்புணர்வும் பற்றிய கருத்தமர்வு தம்பலகாமம் விவசாயிகளுக்கு நடத் தப்பட்டது.

திருகோணமலை பிரதி விவசாய பணிப்பாளரின் பணிப்புரைக்கு அமைய, உதவி விவசாய பணிப்பாளரின் தலைமையின் கீழ், தம்பலகமாம் விவசாய போதனாசிரியர் பிரிவில், புது குடியிருப்பு கிராம சேவையாளர் பிரி வுக்கு உட்பட்ட நெல் வயல் நிலங்களில் ஏற்பட்டுள்ள கபில நிற தாவர தத்தி, வெண் முதுகு தாவரத் தத்தி, தாக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புக்களை முகாமைத்துவம் செய்து அவற்றை குறைப்பதற்கான விழிப்புணர்வு இன்று (15) அந்த வயல் நிலப் பகுதியில் இடம்பெற்றது.

தற்போது ஏற்பட்டிருக்கும் தாவரத் தியின் வெண்முதுகு, கபில நிறம் போன் றன நெற்செய்கையின் போது நோய் தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளன. இதில் இருந்து விவசாயிகள் மீள எவ் வாறான நடவடிக்கைகளை முன்னெ டுக்க வேண்டும் என்பது தொடர்பில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வூட்டினர்.

இது தொடர்பில் உதவி விவசாய பணிப்பாளர் சீ.ஆர்.டி.துஷ்யந்தக ஊட கங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

தம்பலகாமம் பகுதியில் சுமார் 1117 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் பெரும் போக விவசாய செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. நாட்டின் வடகிழக்கு உட்பட பல வயல் பிரதேசங்களில் இந்த நோய்த் தாக்கமான கபில நிற வெண்ணிற தாவர தத்தி தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இது அசாதாரண காலநிலை கார ணமாக வேகமாகப் பரவி வருகிறது. இதனைக் கட்டுப்படுத்த விவசா யிகளுக்கான முன் ஆயத்த முறைகளை செயன் முறை பயிற்சி ஊடாக வழங்கி வருவதுடன் ஒலிபெருக்கி மூலமான விழிப்புணர்வுகளையும் விவசாய திணைக்களம் ஊடாக செய்து வருகி றோம்.– என்றார்.

இந்த நோய்த் தாக்கத்தின் பாதிப்பால் விவசாயிகளாக நாங்கள் நஷ்டமடைந்து வருகிறோம். கிருமி நாசினி பல முறை விசிறினாலும் அதன் தாக்கம் ஓயாத நிலையில் உள்ளது. இதற்கான நிரந்தர தீர்வைப் பெற்றுத் தாருங்கள் என விவசாயிகள் இதன் போது தெரிவித்தனர்.

மருந்துக் கலவைகளைக் கலந்து நோய் தாக்கத்தை இல்லாதொழிப்பது தொடர்பான செயன்முறைப் பயிற்சியும் வயல் நிலப்பகுதியில் வைத்து விவசா யிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உதவி விவசாய பணிப்பாளர் சி.ஆர்.டி துஷ்யந்தி, விவ சாய போதனாசிரியர் ஏ.எச்.எம். அஸ்கர், தொழில்நுட்ப உதவியாளர் கே.செந்தூ ரன் உட்பட பிரதி விவசாய பணிப்பாளர் பணிமனையின் அதிகாரி கள், விவசாயி கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# மூளாய் ஐயனார் கோவிலில் பஜனை!

மார்கழி முதலாம் நாள் நாளை மறுதினம் (17) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து வருடா வருடம் நடப்பதுபோல் பாதயாத்திரையாக வரும் ஐயப்ப சுவாமிமார்களுக்கு வழிநெடுகிலும் பூரணகும்ப வரவேற் பளித்து பாதபூஜை செய்து ஐயனார் கோவிலில் ஐயப்பன் பஜனை படிப்பூஜை நடைபெறும்.

இதன்போது சக்தி பூஜையும் நடை பெறவுள்ளது.

அனைத்து ஐயப்ப சுவாமிமார்கள், அடியார்கள் அனைவரையும் மூளாய் பூரணை புஷ்கலை சமேத ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார், ஸ்ரீ காயத்திரி அம்பாள் ஆலய நிர்வாகத்தின ரும், பூஜை ஒழுங்கு செய்பவர்களும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்ற னர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நியாயமான கேள்வி

நாட்டு மக்கள் தமது இறைமையை வெளிப்படுத்தும் தேர்தல்களாக மூன்று வாக்களிப்புகளை அரசமைப்பு தெளிவுபடுத்தி நிற்கின்றது.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், சர்வஜன வாக்கெடுப்பு ஆகியவையே அந்த மூன்றும். தற்போதைய அரசமைப்பு 1978 இல் கொண்டுவரப்பட்ட போது நாட்டில் மாகாண சபை முறைமை இருக்கவில்லை. அதனால் அத்தேர்தலை மக்களின் இறைமையை வெளிப்படுத்தும் வாக்களிப்பாக அரசமைப்பு குறிப்பிடவில்லை.

எனினும்தன்தன்மாகாணப்பிராந்தியங்களுக்கான நியதிச் சட்டங்களை யாக்கும் அதிகாரம் கொண்ட மாகாண சபைகளுக்கு மக்கள் வாக்களிப்பதன் மூலமும்அவர்களின்இறைமை வெளிப்படுத்தப்படுவதாக உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பு ஒன்றின் மூலம் முன்மாதிரி விளக்கம் ஒன்றைத் தந்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு மக்களின் இறைமையை வெளிப்படுத்தும் ஒன்றாக அடையாளப்படுத்தப்படவில்லை. ஆனால் மக்கள் உள்ளூரில் தத்தமது பிரச்சினைகளைத் தாங்களே கையாண்டு, தீர்வு காண்பதற்கான பிரதான பொறிமுறையாக அதுவே இருக்கின்றது.

அதனால்தான், உள்ளூராட்சித் தேர்தல்களும் சுதந்திரமாக - சுயாதீனமாக - நேர்மையாக - முறையாக - நடத்தப்படுவதற்காக அதுவும் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான திகதியைத் தீர்மானிப்பதும், அறிவிப்பதும், சுயாதீனமான வகையிலும் நீதி நியாயமான முறையிலும் அதை நடத்தி முடிப்பதும் சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவின் பொறுப்பாகும்.

ஆனால் நீதி நியாயமான முறையிலும், சுயாதீனமாகவும் தேர்தலை நடத்தும் அதிகாரம் கொண்ட அந்த அமைப்பை இவ்விடயத்தில் செயற்படவிடாமல் தந்திரோபாயமாகத் தடுத்து, ஜனநாயக விரோதமான முறையில் செயல்படுகின்றார் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான நிதியைத் தான் நிதி அமைச்சர் என்ற முறையில் தலையிட்டு வெட்டியதன் மூலம், உள்ளூராட்சித் தேர்தலை குறித்த காலத்தில் நடத்த விடாமல் தடுக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. நாட்டில் சுயாதீனத் தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு எதிரான நிறைவேற்றதிகாரத்தின் அடாவடித்தனம் இது. சுயாதீனத் தேர்தல் ஏற்பாட்டில் தலையிட்டு, செல்வாக்குச் செலுத்தி, தனிஷ்டப்படி அதை முன்னெடுக்கச் செய்யும் நிறைவேற்றதிகாரத்தின் சர்வாதிகாரப் போக்கு இது.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு உரிய நிதியை விடுவிக்குமாறு நிதி அமைச்சுக்கு கடந்த மார்ச் மாதம் மூன்றாம் திகதியே உயர்நீதிமன்றம் உத்தரவிட்டு விட்டது. அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஒன்பது மாதங்கள் கடந்தும் உரிய நிதியை நிதி அமைச்சு விடுவிக்காமல் அட்டூழியம் பண்ணுகின்றது.

இந்தத் தேர்தலை நடத்துவதற்கு ஆயிரம் கோடி ரூபா தேவை. அதில் ஏற்கனவே நூறு கோடி ரூபா இந்தத் தேர்தல் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவழித்தாகிவிட்டது. மிகுதியான 900 கோடி ரூபாவை விடுவிக்காமல் முட்டுக்கட்டை போட்டுத் தடுப்பதன் மூலம் உள்ளூராட்சித் தேர்தலே நடக்காமல் பார்த்துக் கொள்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு 900 கோடி ரூபா இல்லை என்று கூறும் அரசு, உயர் மட்டத்தில் தொடர்புடைய சமூக நிதித் திட்டங்களுக்கு 24 ஆயிரத்து 300 கோடி ரூபாவை செலவிட முன் வந்துள்ளமை எங்ஙனம் நியாயம்? இதில் ஆயிரம் கோடி ரூபாவுக்கு உட்பட்ட செலவில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தினால் அதுவும் சமூக நீதி நடவடிக்கையாக அமையாதா என்று 'பவ்ரல்' அமைப்பின் தலைவர் றோஹண ஹெட்டியாராய்ச்சி கேள்வி எழுப்புகின்றார். நியாயமான கேள்விதான்.



# கார்மேல் பற்றிமா மாணவர்கள் கல்முனையில் முதலிடம்!

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை வலயக் கல்விப் பணிமனை நடத்திய தரம் 5 மாணர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் முதலாம் இடத்தை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி அணி பெற்றுக் கொண்டது. இந்த வலய மட்டப் போட்டி பாண்டிருப்பு மகாவித்தியாலயத்தில் நடை பெற்றது.

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவர்கள் கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. றெஜினோல்ட் வழிகாட்டலில், பிரதி அதிபர் அருட்சகோதரி எம். பிரியசாந்தியின் நெறிப்படுத்தலில் இந்தப் போட்டியை எதிர்கொண்டனர்.

# முல்லை. பண்ணையாளர்களை பதிவு செய்யுமாறு அறிவுறுத்து!

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டப் பண்ணையாளர்கள் மாடுகளுக்கான பண்ணைகளை பதிவு செய்து உச்ச பயன் பெற்றுக் கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பிரதிப்பணிப்பாளர் கிருஜகலா சிவானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

இதற்கமைய அவர் விடுத்துள்ள கோரிக்கையில் பண்ணையாளர்கள் தமது மாட்டுப் பண்ணைகளை பதிவு செய்ய வேண்டியதும் தங்களால் வளர்க்கப்படும் சகல மாடுகளுக்கும் காதுப்பட்டி பொருத்துதலும் மிக முக்கியமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள பண்ணைகளில் மாடுகளின் பண்ணைகள் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும் என்பது 2008 ஆம் ஆண்டில் இருந்தே முக்கிய விடயமாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பல பண்ணையாளர்கள் இதில் ஆர்வமற்று இருந்து வருகின்றனர். தற்போது இணையம் மூலமும் இவை பதிவு செய்யப்பட வேண்டும் என்று பணிப்புரை விடுக்கப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விலங்குகளுக்குக் காது இலக்கம் பொருத்தப்பட்டுப் பண்ணைகள் பதிவு செய்வதால் பண்ணையாளர்களுக்கு நாட்டிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையை சரியாக கணித்தல், பண்ணைகளில் உள்ள விலங்குகள் பற்றிய பல்வேறு தகவல்களை ஆராய்ந்து பண்ணைகளின் முன்னேற்றத்தையும் உற்பத்தியையும் அதிகரிப்பதற்கான திட்டங்களை தீட்டுதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் இலாபமீட்டச் செய்தல், விலங்குகளை இடத்துக்கிடம் கொண்டு செல்வதை இலகுவாக்கல், விலங்குகள் களவாடப்படுதலைத் தடுத்தல், பண்ணைகளில் தேவையற்ற விலங்குகளைக் கழித்து விற்க நடவடிக்கை எடுத்தல், இறைச்சிக்காக வெட்டப்படும் விலங்குகளுக்கான அனுமதி, ஏனைய மாவட்டங்களுக்கு கொண்டுசெல்வதற்கான அனுமதி போன்றவற்றுக்கு பதிவு அவசியம், இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் இழப்புக்களுக்காக இழப்பீடுகள் வழங்கப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது பண்ணைப் பதிவானது முக்கியமானதாக கருதப்படுகிறது, வீதியோரங்களில் நின்று விபத்துக்களுக்குள்ளாகும் மாடுகளை இனம் காணுதல், பயிரழிவு ஏற்படுத்தும் விலங்குகளை ஏலம் விடுதல் செயன்முறைக்கு முன் பண்ணையாளர்களை இனங்காண உதவுவதன் மூலம் குறித்த பண்ணையாளர்களிடம் விலங்குகளை ஒப்படைத்தல், மேலதிக நடவடிக்கையெடுத்தல் போன்ற விடயங்களுக்கு இலகுவாக இருக்கும்.

அவற்றைவிட பதிவுசெய்த பண்ணையாளர்களுக்கு மட்டுமே திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகளை வழங்கும் திட்டமும் வெகுவிரைவில் கிடைக்க வழி ஏற்படும்.

நோய்க்கான சிகிச்சை வழங்குதல், விலங்குகளுக்கான தடுப்புமருந்தேற்றல், செயற்கைமுறை சினைப்படுத்தல் செய்தல், பண்ணைகளின் முன்னேற்றத்துக்கான கருத்திட்டங்களை வழங்குதல் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் இதில் அடங்கும்.

அதனைவிட காதுப்பட்டி இல்லாத மாடுகளை அரச உடமையாக்கிக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பமும் ஏற்பட வாய்ப்புள்ளது.

விலங்குகளுக்கு காதிலக்கம் பொருத்தும் வேலைத் திட்டமானது இலங்கை முழுவதும் நடைபெறும் வேலைத்திட்டம் என்பதாலும் ஒவ்வொரு விலங்கும் கட்டாயமாக காதுப் பட்டியுடன் காணப்பட வேண்டும் என்று வடமாகாண உயர்மட்ட அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பண்ணையாளர்கள் இதற்காக முக்கிய கவனத்தை எடுத்துச் செயற்பட வேண்டும் என்று மிக அவசியமாக வலியுறுத்தப்படுகின்றனர்.

பண்ணைகளைப் பதிவு செய்வதற்கான கோரிக்கைகளைக் கால்நடைவைத்திய அலுவலகங்களில் தெரியப்படுத்திப் பதிவதற்கான படிவங்களைப் பெற்று முற்பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஜனவரி மாதம் 31 ஆம் திகதிவரை இந்தக் கோரிக்கைக்கான படிவங்களைக் கால்நடை வைத்திய பணிமனைகளில் பெற முடியும். பெற்று அவற்றைப் பூரணப்படுத்தி மீண்டும் வைத்தியர்களிடம் இதனைக் கையளிக்க வேண்டும். கோரிக்கைக்கு அமைவாகக் காதுப்பட்டி பொருத்தும் வேலையை வைத்தியர்கள் அதற்கான அலுவலர்களைப் பயன்படுத்தி மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பார்கள்.

தங்களிடம் உள்ள மோட்டார் வாகனங்களுக்கு அவற்றின் ஆவணங்கள் எவ்வளவு முக்கியமோ அதேபோலவே இந்த விலங்குகளுக்கு இப்பண்ணைப் பதிவுச் சான்றிதழ் மிக முக்கியமானதாகும்.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு உடனடியாக செயற்படுமாறு பண்ணையாளர்கள் அனைவரையும் முல்லைத்தீவு மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பிரதிப் பணிப்பாளர் கிருஜகலா சிவானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

# தெற்கை மையப்படுத்தியே நெற் பயிரினங்கள் சிபாரிசு!

## வடக்குக்கு அவை பொருத்தம் இல்லை என்கிறார் ரமணிதரன்

(பிரபாகரன் டிலக்சன்)

விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் தென்னிலங்கையை மையப்படுத்தி உள்ளதால் அவர்கள் தெற்கை மையப்படுத்தியே நெற் பயிர்களை சிபாரிசு செய்கின்றனர். அவை எமது மாவட்ட நிலங்களுக்குப் பொருத்தமானவையாக இருப்பதில்லை.

இவ்வாறு யாழ். மாவட்ட விதைகள் அத்தாட்சிப்படுத்தல் சேவைகள் திணைக்கள நிலைய பொறுப்பதிகாரி ரமணிதரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலக விவசாயப் பிரிவினரால் யாழ். மாவட்டத்தில் வேகமாக பரவிவரும் கபிலத் தத்தி, வெண் முதுகு தத்தி ஆகிய பூச்சிகளை கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கை யில்,

இலங்கையில் உள்ள 20 மில்லியன் மக்களுக்கும் உணவு கொடுக்க வேண்டிய கட்டாயம் விவசாயத் திணைக்களத்துக்கு உள்ளது. இயற்கை விவசாயம் மூலம் அந்தளவு உணவுத் தேவையை பூர்த்தி செய்யமுடியுமா என்பது சந்தேகமே.

பிராந்திய நெல்லினமாக வடக்கில் மட்டும் விசேடமாக அறிமுகப்படுத்தப்பட்ட வி.ஜி 406 (வி.ஜி.406) எனும் நான்கு மாத கால நெல்லினம் அதிகளவு கபில நிற தத்தி பூச்சிகளால் பாதிக்கப்பட்டுள்ளமை இனம் காணப்பட்டுள்ளது.

விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் தென்னிலங்கையை மையப்படுத்தி உள்ளதால் அவர்கள் தெற்கை மையப்படுத்தியே நெற் பயிர்களை சிபாரிசு செய்கின்றனர். அவை எமது மாவட்ட நிலங்களுக்குபொருத்தமானவையாக இருப்பதில்லை.

இதனால் விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் சிபாரிசு செய்கின்ற நெல்லினங்கள் கூட விரைவில் பூச்சிகளின் தாக்கத்துக்கு உள்ளாகின்றன.- எனத் தெரிவித்தார்.




# தேசிய ரீதியில் மீண்டும் சாதனை!

(வி.ரி.சகாதேவராஜா)

கல்வி அமைச்சு நடத்திய சர்வ தேச ஒலிம்பியாட் கணிதப் போட்டியில் தேசிய மட்டத்தில் தங்கம் வென்று சாதனை படைத்த மல்வத்தை மாணவி ஜினோதிகா, மீண்டும் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் தேசிய ரீதியில் தெரிவாகிச் சாதனை படைத்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலய மாணவி செல்வி சிவரூபன் ஜினோதிகா ஏற்கனவே கணித ஒலிம்பியாட் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்று மகத்தான சாதனை படைத்துள்ளார்.

இது சம்மாந்துறை வலயத்தில் சர்வதேச ஒலிம்பியாட் சரித்திரத்தில் முதல் சாதனையாகும்.

இப்போது விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றி முதல் 10 முதல் பத்து சாதனையாளர்களில் ஏழாவது இடத்தில் வந்துள்ளார்.

இதன் மூலம் இவர் சர்வதேச பயிற்சிக்கு தெரிவாகியுள்ளார்.

கணிதம் மற்றும் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிகளில் கிழக்கு மாகாணத்தில் தெரிவான முதனிலை மாணவியாக செல்வி ஜினோதிகா விளங்குகிறார்.



# வீட்டுத் தோட்டங்களை உருவாக்கி நச்சற்ற உணவை உண்ணுங்கள்

## மாகாண விவசாயப் பிரதி பணிப்பாளர் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

ஒவ்வொருவரும் தமக்கான வீட்டுத் தோட்டங்களை உருவாக்கி அதன் மூலம் நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்து உடல் ஆரோக்கியத்தை பேண வேண்டும்.

இவ்வாறு மாகாண விவசாயப் பிரதி பணிப்பாளர் திருமதி சூரியகுமார் ஜெகதீஸ்வரி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அமரா பெண்கள் ஒன்றியத்தின் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கும் முகமாகவும் வீட்டுத் தோட்ட செய்கைகளை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா முப்பதாயிரம் பெறுமதியான வீட்டுத்தோட்ட உபகரணங்களும் விதை, தானியங்களும் வழங்கப்பட்டுள்ளன.

பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் வீட்டுத் தோட்டப் பயிற்சிகள் வட்டக்கச்சியில் அமைந்துள்ள மாதிரி விவசாய பண்ணையில் வழங்கப்பட்டன.

அவர்கள் பயிற்சி நிறைவு பெற்று நேற்று மாவை வீட்டுத் தோட்ட பயிர்செய்கைக்குரிய விதை தானியங்கள் மற்றும் விவசாய உபகரணங்களைப் பெற்றுக் கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து பயனாளிகளுக்கான உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வின் பிரதம பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.





# நாவிதன்வெளி மாணவர் நாடாளுமன்ற நிகழ்வு

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தின் மாணவர்களது முதல் நடாளுமன்ற நிகழ்வு அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் நேற்று(14) வியாழக்கிழமை நடைபெற்றது.

சிறப்பு பார்வையாளர்களாக சம்மாந்துறை வலயக்கல்வி பணிமனையின் வலய மாணவர் நாடாளுமன்ற இணைப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான எச். நைரூஸ்கான், பாடசாலை வலுவூட்டல் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக அதிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிபர் ஆசிரியர்கள் பாண்ட் வாத்தியம் முழங்க பிரதான வீதியிலிருந்து அழைத்து வரப்பட்டனர்.

தேசியக் கொடியை உதவிக் கல்விப் பணிப்பாளர் எச்.நைரூஸ்கான், மாகாண கொடியை உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, பாடசாலை கொடியை அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் ஆகியோர் ஏற்றியதும் தேசிய கீதம் மற்றும் பாடசாலை கீதம் இசைக்கப்பட்டது.

பின்னர் நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் சபாநாயகர் மற்றும் பிரதமருக்கு நியமனங்களை வழங்கினார். தொடர்ந்து அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்தனர். அமைச்சர்களின் கன்னி உரையும் இடம்பெற்றது.

உதவிக் கல்விப் பணிப்பாளர் எச். நைரூஸ்கான், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் அமர்வுபற்றிஅவதானிப்புரையாற்றினர்.

முறையான நாடாளுமன்ற அமர்வு போன்று மாணவர் பாராளுமன்ற நிகழ்வு முறைப்படி செங்கோல் சபாநாயகர் பிரசன்னத்துடன் அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகிதம் நடைபெற்றது.

நிகழ்வுகள் அனைத்தும் மும்மொழிகளிலும் அறிவிப்பு செய்யப்பட்டது சிரேஷ்ட ஆசிரியர் ந.கோடீஸ்வரன் நன்றியுரையாற்றினார்.





# அலிசாஹிர் மௌலானா எம்.பியுடன் ஐ.நா. சபை வதிவிட பிரதிநிதி சந்திப்பு

(ஏ.எஸ்.மௌலானா)

கிழக்கு மாகாணத்துக்கு விசேட விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி மார்க் அன்ரே பிரன்சி, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று வியாழக்கிழமை பிற்பகல் திருகோணமலை நகரில் இடம்பெற்றது.

இதன்போது முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் சமகால பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பிலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் சமகால நிலைவரங்கள், அபிவிருத்தி திட்டங்கள், மக்களின் தேவைகள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா எடுத்துக் கூறினார்.





# மொழி மற்றும் கலாசாரத்தினூடாக சுற்றுலாத் துறைக்கு புத்துணர்ச்சி!

## தென்கிழக்குப் பல்கலையில் சர்வதேசக் கருத்தரங்கம்

(நூருல் ஹுதா உமர் )

“நிலைபேறான சுற்றுலாத் துறைக்கு மொழி மற்றும் கலாசாரம்” எனும் தலைப்பில் சர்வதேச கருத்தரங்கம் இலங்கை தென் கிழக்குப் பல்கலைக் கழகக் கலை கலாசார பீட மொழித் துறையின் ஏற்பாட்டில் கலை கலாசார பீட கேட்போர் அரங்கில், மொழித்துறைத் தலைவர் கலாநிதி ஏ. விக்கிரமரட்ன தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் பிரதம அதிதியாக தென் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரும் அதிதிகளாக கலை கலாசாரபீட பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் மற்றும் கேரளா, கொச்சின் விஞ்ஞான தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பி. அருணாச்சலமும் கலந்து கொண்டனர்.

மொழித் துறைத் தலைவர் கலாநிதி. ஏ. விக்கிரமரட்ன தலைமையில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் மொழித் துறை சார்பாக சிரேஷ்ட விரிவுரையாளர்களான பேராசிரியர் ஏ.எப்.எம். அஷ்ரஃப், கலாநிதி. க. இரகுபரன், ந. சுபராஜ் ஆகியோர் ஆய்வு ரீதியான கருத்துக்களை முன்வைத்து உரை நிகழ்த்தினர்.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் வருகை தந்த பேராசிரியர்கள், கலாநிதிகள், விரிவுரையாளர்கள், பணிப்பாளர்கள் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

கருத்தரங்கில், இலங்கைச் சூழலில் மொழி மற்றும் கலாசாரத்தினூடாக சுற்றுலாத் துறையை வளர்ப்பதில் உள்ள சாதகங்கள், சவால்கள், சாத்தியப்பாடுகள் என்பன காத்திரமான உரைகளாக முன்வைக்கப்பட்டன.

சுற்றுலாத் துறையில் மேம்பாடடைந்திருக்கும் இந்திய, அரபுலக மற்றும் சர்வதேச நாடுகள் தங்களது நிலையான சுற்றுலாத் துறைக்கு மொழி மற்றும் கலாசாரத்தை முன்வைத்து மேற்கொள்ளும் முயற்சிகள் பற்றி விரிவாகப் பேசப்பட்டது.

கருத்தரங்கை மொழித்துறை விரிவுரையாளர் எம். அப்துல் றஸாக் நெறிப்படுத்தினார். இந்த நிகழ்வுக்கான இணைப்பாளர்களாக மொழித்துறை சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், வர்த்தக முகாமைத்துவ பீட துறைத் தலைவர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா ஆகியோர் செயற்பட்டனர்.









# மாணவர்கள் கௌரவிப்பு!

(சப்னா றிபாஸ்)

சம்மாந்துறை, நெய்னாகாடு அல்–அக்ஸா வித்தியாலயத்தில் இருந்து முதல் தடவையாக கா.பொத. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றி உயர் தரம் கற்பதற்கு தகுதி பெற்ற மாணவர்களை பராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் நேற்று (14) நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.பி.ஹிபத் துல்லாஹ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினரும், சம்மாந்துறைப் பிரதேச சபையின் தவிசாளருமான ஐ.எல்.எம்.மாஹீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.



இந்தப் பாடசாலை தரம் ஒன்பதுவரை கல்வி நடவடிக்கைகள் இடம்பெற்று வந்த நிலையில் மாணவர்களின் கல்வி நலன் கருதி கா.பொத.சாதாரண தரம் வரை தரம் உயர்த்தப்பட்டது. முதல் தடவையாக கா.பொத. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மூன்று மாணவர்களில் இரண்டு மாணவர்கள் கா.பொ.த. உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை பிரதம அதிதியால் இரு மாணவர்களும் பாராட்டிக கௌரவிக்கப்பட்டனர். உயர்தரம் கற்பதற்கான புலமை பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

# சாய்ந்தமருதில் இடம்பெற்ற சுனாமி ஒத்திகை நிகழ்வு!

(எம்.எஸ்.எம்.ஸாகிர், நூருல் ஹுதா உமர்)

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் சாய்ந்தமருது பிரதேச செயலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த சுனாமி ஒத்திகை நிகழ்வு நேற்று (14) வியாழக்கிழமை சாய்ந்தமருது அல்ஜலால் வித்தியாலயத்தில் இருந்து ஆரம்பித்து, சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் முடிவடைந்தது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த சுனாமி ஒத்திகை நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலர் எம்.ஐ. முஆஃபிகா உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவத் திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருது அல்–ஜலால் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.சைபுதீன், பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள், இராணுவத்தினர், கடற்படை மற்றும் பொலிஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இயற்கை அனர்த்தம் இடம்பெற்றால் மாணவர்கள் எவ்வாறான நடவடிக்கைகளைக் கையாள வேண்டும், எவ்வாறு தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றிய விழிப்புணர்வுடன் அடங்கிய முன்னெச்சரிக்கை விடயங்கள் பற்றியும் மாணவர்களுக்கு இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவ அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ. எம். றியாஸ் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ. முஆஃபிகா ஆகியோர் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தினர்.









# காரைதீவில் இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவருக்குப் பரிசில்

**(எம்.எம்.றம்ஸீன்)**

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் காரைதீவு பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட இலக்கிய விழாவில் காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் பிரதம அதிதியாகவும் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் றீ.எம் .றின்ஷான் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இலக்கியப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்கள், திறந்த போட்டியாளர்கள் கலந்து கொண்டு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வைக் காரைதீவு பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சுதர்சன் ஒழுங்கமைத்திருந்தார்.





# முன்பள்ளிச் சிறார்களின் விடுகை விழா!

**(எம்.எம்.றம்ஸீன்)**

காரைதீவு ஆனந்தா முன் பாலர் பாடசாலையின் விடுகை விழா அண்மையில் நடைபெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் உட்பட பலரும் கலந்து இந்த நிகழ்வில் கொண்டனர்.

இதன்போது சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# புலமைப் பரிசில் நிகழ்நிலை அமர்வு

**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)**

புத்தளம் இளங்கலை பட்டதாரிகளின் அமைப்பானது "பாத்வெய்ஸ் டு எக்ஸலன்ஸ் அன்வெலிங் எடியூகேஷனல் ஸ்கொலர்ஷிப்" என்ற தொனிப் பொருளில் கல்வி புலமைப்பரிசில் தொடர்பான அமர்வு ஒன்றை நிகழ்நிலையில் நாளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படிப்புக்கான புலமைப்பரிசிலை பெறுவதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தும் நோக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவர்கள் நிகழ்வுக்கு பொறுப்பான ஹப்ஸானுடன் (தொலைபேசி இல 078 136 79 29) தொடர்பு கொள்ளுமாறு இளம்கலை பட்டதாரிகள் அமைப்பின் செயலாளர் எம்.எப் கதீஜா விஸாம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பாலமுனைக்கு முன்பாகத் தேங்கியுள்ள நீரை அகற்றக் கோரி மகஜர் கையளிப்பு!

(எம். எப். நவாஸ்)

பாலமுனை பிரதான வீதி அல் ஹிதாயா பாடசாலைக்கு முன்பாக அமைந்துள்ள பஸ் தரிப்பிட பகுதியில் மழை காலங்களில் வெள்ள நீர் வழிந்தோடாது தேங்கியுள்ளது.

இதனால் மாணவர்கள், ஆசிரியர்கள், பாதசாரிகள் மற்றும் பஸ்ஸுக்குக் காத்திருக்கும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர்.

இது சம்மந்தமாக வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பொறியியலாளரிடம் பாலமுனை இளைஞர் சபை மகஜர் ஒன்றைக் கையளித்தது. அதற்கான நிரந்தரமான தீர்வாக வடிகான் ஒன்றை அமைத்து வழங்குமாறு கேட்டு ள்ளது. அதற்கிணங்க உடனடியாக அதற்கான வேலைகளை செய்து தருவதாக வாக்குறுதியும் பெறப்பட்டது.



# சாய்ந்தமருதில் இரத்ததான முகாம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

"உதிரம் கொடுத்து உயிர் காப்போம்" எனும் தொனிப்பொருளில் OG Society மற்றும் NEXT GEN (UYOS) அமைப்புகள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள மாபெரும் இரத்ததான முகாம் சனிக்கிழமை (16) காலை 08 மணி முதல் மாலை 03 மணிவரை சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்த வகைகளுக்கான பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் முகமாக Rizley Musthaffa Education Aid Social Organization இன் அனுசரணையில் இது இடம்பெறவுள்ளது.



இந்த இரத்ததான முகாமில் கலந்து கொண்டு முடியுமானவர்கள் இரத்தம் வழங்கி, உயிர் காக்க முன்வந்து தங்களது பங்களிப்பை வழங்குமாறு ஏற்பாட்டு குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# பிரதேச செயலகங்களில் புளிய மரங்களை நடுக!

## பிரதேச செயலர்களுக்கு மாவட்ட செயலர் பணிப்பு

யாழ். மாவட்டத்தில் அனைத்து பிரதேச செயலகங்களிலும் பொருத்தமான இடங்களில் புளியமரங்களை நடுமாறு பிரதேச செயலர்களுக்கு மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன் பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் இதனை மாவட்ட செயலர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஐம்பது ஆண்டுகளில் பயன் தரு புளியமரம் நாட்டியதாக வரலாறு இல்லை. தற்போது உள்ள புளியமரங்கள் எல்லாமே இயற்கையாக விதை மூலம் பரவியதே. அவையும் தற்போது




வெட்டப்பட்டு கொண்டிருக்கின்றன.

தற்போது நாட்டுக்கு தேவையான புளி இறக்குமதி செய்யப்படுகிறது. ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் பொருத்தமான இடங்களில் புளிய மரங்களை நடுமாறு பிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் உதவியை கோரியுள்ளேன். எதிர்காலத்தில் புளிக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படும்.

தற்போது புளியமரத்தை நட்டால் பத்து பதினைந்து வருடங்களில் புளிக்குத் தட்டுப்பாடு காணப்படாது.

யாழ். மாவட்டத்திற்கே உரித்தான பாரம்பரிய பழ மரங்கள் வெட்டப்படுகின்றன. மா மரம், பலா மரம் என்பன வெட்டப்படுகின்றன. இது தொடர்பில் எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்படும். பாரம்பரிய பழ மரங்களை பாதுகாக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. –என்றார்.





# ராஜஸ்தானில் ஒரே குடும்பத்தினர் ஐந்து பேர் தூக்கிட்டுத் தற்கொலை

ராஜஸ்தான் மாநிலம் பைகானேர் மாவட்டம் அந்தியோதயா நகரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேரின் உடல்கள் அவர்களது வீட்டில் தூக்கில் தொங்கி இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

ஹனுமான் சோனி(வயது 45), அவரது மனைவி விமலா(40), மகன்கள் மோஹித்(18), ரிஷி(16) மற்றும் மகள் கோதியா(14) ஆகிய 5 பேரின் உடல்களும், அவர்களது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் அளித்த தகவலின்பேரில், பொலிஸார் விரைந்து வந்து உயிரிழந்த 5 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர், ஒரே சமயத்தில் தற்கொலை செய்து கொள்வதற்கான காரணம் என்ன? அல்லது இதற்கு வேறு ஏதேனும் காரணம் உள்ளதா? என பல்வேறு கோணங்களில் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அனைத்து மாநிலங்களிலும் புழங்குவதற்கு இந்தி மொழியென்ன இந்தியக் கரன்சியா?

## கவிஞர் வைரமுத்து எழுப்பியுள்ள கேள்வி

இந்தியாவை ஓர் ஒற்றை மொழி மட்டும் கட்டியாள முடியுமா என்று கவிஞர் வைரமுத்து கேள்வி எழுப்பியுள்ளார்.

கோவாவில் உள்ள தபோலிம் விமான நிலையத்தில் பாதுகாப்பு சோதனையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படை வீரர்கள், இந்தி மொழிதான் தேசிய மொழி என தமிழ்நாட்டு பெண் ஒருவரிடம் வாதிட்ட சம்பவம் தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு கவிஞர் வைரமுத்து கண்டனம் தெரிவித்து உள்ளார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "இந்தி பேசாதவர் இந்தியர் இல்லை என்று



அரசமைப்பில் இருக்கிறதா? இந்தியா என்ற நாடு இந்தி என்ற சொல்லடியில்தான் பிறந்ததா? எல்லா மாநிலங்களிலும் புழங்குவதற்கு இந்தி மொழியென்ன இந்தியக் கரன்சியா?

இந்தி பேசும் மாநிலங்களிலேயே இந்தி கல்லாதார் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? வடநாட்டுச் சகோதரர்கள் தமிழ்நாட்டுக்குள் வந்தால் தமிழ் தெரியுமா என்று தெள்ளு தமிழ் மக்கள் எள்ளியதுண்டா?

சிற. நாடுகளும் கூட ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்சிமொழிகளால் இயங்கும்போது இந்தியாவை ஓர் ஒற்றை மொழிமட்டும் கட்டியாள முடியுமா? 22 பட்டியல் மொழிகளும் ஆட்சிமொழி ஆவதுதான் வினாத் தொடுத்த காவலர்க்கும் விடைசொன்ன தமிழச்சிக்குமான ஒரே தீர்வு" என்று தெரிவித்து உள்ளார்.

# மக்களவையில் வண்ணப் புகைக்குண்டுகள் வீச்சு; சரணடைந்த பிரதான சூத்திரதாரி விசாரணையில்!

இந்திய நாடாளுமன்ற மக்களவை யில் நேற்று முன்தினம் பார்வையாளர் மாடத்தில் இருந்த இரு வாலிபர்கள் திடீரென சபைக்குள் குதித்து வண்ண புகைக்குண்டுகளை வீசினர். பாதுகாப்பு அதிகம் உள்ள நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்த சம்பவத்துக்கு மூளையாக இருந்து செயல்பட்டவர் கொல்கத்தாவை சேர்ந்த லலித் ஜா. நாடாளுமன்றத்திற்குள் பாதுகாப்பு விதிமுறையை மீறி செயல்பட்ட குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், முக்கிய குற்றவாளியாக கருதப்படும் லலித் ஜா, தலைமறைவானார்.

அவரைப் பிடிக்க பொலிஸார் தீவிர தேடுதல் நடத்தினர். இந்த நிலையில், நேற்று இரவு டெல்லி பொலிஸாரிடம் லலித் ஜா சரண் அடைந்தார் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன. இதைத் தொடர்ந்து முறைப்படி கைது செய்யப்பட்ட லலித் ஜா, டெல்லி பொலிஸின் சிறப்புப் பிரிவு பொலிஸா ரிடம் ஒப்படைக்கப்பட்டார். லலித் ஜாவிடம் பொலிஸார் பல்வேறு கோணங்களில் துருவித் துருவி விசாரணை நடத்தி வருகிறார்கள்.





# வெனிசுலா நெடுஞ்சாலையில் லொறி விபத்தைத் தொடர்ந்து 17 வாகனங்கள் அடுத்தடுத்து மோதி எரிந்ததில் 16 பேர் சாவு!

வெனிசுலா நாட்டின் தலை நகர் கராகஸை இணைக்கும் கிரான் மாரிஸ்கர்டி அயாகுசோ நெடுஞ்சாலை யில் பயங்கர விபத்து ஏற்பட்டது.

நெடுஞ்சாலையில் அதிவேகமாக சென்றுகொண்டிருந்த லொறி, சாரதி யின் கட்டுப்பாட்டை இழந்து மற்ற வாகனங்கள் மீது அடுத்தடுத்து மோதி யது. சுமார் 17 வாகனங்கள் மீது மோதியதில் அந்த வாகனங்கள் சேத மடைந்தமையுடன் தீப்பிடித்து எரிந் தன.

தகவலறிந்த தீயணைப்பு மற்றும் மீட்புக்குழு சம்பவ இடம் சென்று தீயை அணைத்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டது. இந்த விபத்தில் 16 பேர் பரிதாபமாகப் பலியாகினர். பலர் காயமடைந்தனர். அவர்களில் 6 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல் வெளியானது. விபத்து தொடர்பான வீடியோ மற்றும் படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகின.

# ரஷ்யாவின் இலக்கு எட்டப்படும் வரை உக்ரைனில் அமைதி திரும்ப மாட்டாது

## உறுதிபடக் கூறுகின்றார் அதிபர் புடின்

நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாடு மீது ரஷ்யா போர் தொடுத்தது. கிட்டத்தட்ட 2 ஆண்டுகளாக நீடித்து வரும் இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளிராணுவ உதவி, பொருளாதார ரீதியாக உதவி வரு கிறார்கள்.

குறிப்பாக அமெரிக்கா இதுவரை 111 பில்லியன் அமெரிக்க டாலர்கள் (இந்தியப் பணத்தில் சுமார் ரூ.9 லட் சத்து 25 ஆயிரத்து 617 கோடி) வரை நிதி உதவி செய்திருக்கிறது.

எனினும், ரஷ்யா தொடர்ந்து உக்



ரைன்மீது தாக்குதல் நடத்தி வருகிறது. தனது கட்டுப்பாட்டுக்குள் உக்ரைனைக் கொண்டுவர ரஷ்யா தீவிரம் காட்டி வருகிறது.

இந்நிலையில், ரஷ்ய அதிபர் புடின் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில், உக்ரை னில் மொத்தம் 6 லட்சத்து 17 ஆயிரம் படைவீரர்கள் முகாமிட்டுள்ளனர். எனவே மேலும் படைகளை அணி திரட்ட வேண்டிய அவசியம் இல்லை. எங்களின் இலக்கு நிறைவடையும் வரை உக்ரைன் நாட்டில் அமைதி திரும்பாது எனத் தெரிவித்தார்.

அதிபராக கடந்த 24 ஆண்டுக்கு மேல் பதவி வகித்துவரும் புடின், அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ரஷிய அதிபர் தேர்தலில் போட்டியிட முடிவுசெய்துள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் பூட்டோவின் கட்சியில்

# மகன் பிரதமர் வேட்பாளர் தந்தை அதிபர் வேட்பாளர்

பாகிஸ்தானில் பொதுத்தேர்தல் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெற உள்ளது. இந்த நிலையில் பாகிஸ்தான் மக்கள் கட்சி யின் பிரதமர் வேட்பாளராக அக்கட்சி தலைவரும், முன்னாள் பிரதமர் பெனா ஸிர் பூட்டோவின் மகனுமான பிலா வல் பூட்டோ அறிவிக்கப்பட்டுள்ளார்.

அதிபர் வேட்பாளராக அவரது தந்தை ஆசிப் அலி சர்தாரி அறிவிக்கப் பட்டுள்ளார். இவர் 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை அதிப ராக இருந்தார் என்பது குறிப்பிடத்



தக்கது.

முன்னாள் பிரதமர் இம்ரான்கான் ஆட்சி கவிழ்ந்த பிறகு பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியும், பாகிஸ்தான் மக்கள் கட்சியும் இணைந்து ஆட்சி அமைத்தன. இதில் பிலாவல் பூட்டோ 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2023 ஆம் ஆண்டு ஓகஸ்டு வரை வெளியுறவுத் துறை அமைச்சராக பணியாற்றினார்.

தற்போது இந்த இரு கட்சிகளும் தேர்தலில் நேருக்கு நேர் மோது கின்றன. பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியின் பிரதமர் வேட்பா ளராக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் அறிவிக்கப்பட்டுள்ளார்.





# சுழிபுரம் மேற்கு கலைமகளின் 75 ஆவது ஆண்டு பவள விழா!

யாழ்ப்பாணம் – வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பவள விழா புதிதாக அமைக்கப்பட்ட கலைமகள் கலையரங்கில் நிலையத்தின் தலைவர் வடிவேலு கோகுலநேசன் தலைமையில் நடைபெற்றது.

முதன்மை நிகழ்வாக காலை புதிதாக அமைக்கப்பெற்ற கலைமகள் கலையரங்கு சங்கானை பிரதேச செயலர் கவிதா உதயகுமாரால் நாடா வெட்டித் திறந்து வைக்கப்பட்டது.

தொடர்சியாக அரங்கை சம்பிரதாய பூர்வமாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் செயலாளர் பாலரூபன் திறந்து வைத்தார். இதன்போது வலி மேற்கு சனசமூக அபிவிருத்தி உத்தி யோகத்தர் நோபேட் யூலியன், சுழிபுரம் மத்தி மற்றும் மேற்கு கிராம அலுவலர்களான ஜீவராசா மற்றும் பிரதீபா ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சியாக மாலை பவள விழா கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

கலைமகள் சனசமூக நிலையத்தில் 1948 ஆம் ஆண்டு முதல் நிலையத்துக்காகச் சேவையாற்றி மறைந்த நிர்வாக உறுப்பினர்களின் திருவருவ படங்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ச்சியாக வடலியடைப்பு கலைவாணி கலைமன்றத்தின் வரவேற்பு இன்னியத்துடன் கலைமகள் அரங்கு நோக்கி விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பவள விழா சிறப்பு மலர் யாழ். மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன் வெளியீடு செய்து வைத்தார்.

சிறப்பு விருந்தனராக யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் கலந்து கொண்டார்.

கலைமகள் சனசமூக நிலையத்தினர், சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.














# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி; பகுப்பாய்வு 21,22 இல் யாழ்ப்பாணத்தில்!

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் வைத்துப் பகுப்பாய்வு செய்யப்படவுள்ளன என்று சட்ட மருத்துவ அதிகாரி வாசுதேவ நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் நேற்று (14) நடைபெற்றது.

இதுவரை நடைபெற்ற அகழ்வு பணிகளின் போது மீட்கப்பட்ட 40 மனித எச்சங்களின் வயது மற்றும் பாலினம் தொடர்பிலேயே எதிர்வரும் 21 மற்றும் 22ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் பகுப்பாய்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

திட்டமிட்டவாறு எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி மீண்டும் புதைகுழியின் அகழ்வு பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள வழக்கு விசாரணையின்போது தெரிவிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# நொதேர்ன் யுனியில் கிரகப் பிரவேசம்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் பல்கலைக்கழகமான நொதேர்ன் யுனி கட்டடத்துக்கான கிரகப் பிரவேசம் நேற்று(14) இடம்பெற்றது.

நொதேர்ன் யுனியின் நிறுவுனரான இந்திரகுமார் பத்மநாதன் யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பூர்வீகமாகக் கொண்ட கனடா முதலீட்டாளராவார். இவரின் முயற்சியாக யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் நொதேர்ன் யுனி தனியார் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் பட்டது.

மானிப்பாய் மருதடி பிள்ளையார் கோயிலில் விசேட வழிபாடுகளைத் தொடர்ந்து புதிதாக உருவாக்கப்பட்ட நொதேர்ன் யுனியில் சம்பிரதாய பூர்வமாக கிரக பிரவேசம் இடம்பெற்று சாமி படம் வைக்கப்பட்டது.

இதில், நொதேர்ன் யுனியின் நிறுவுனர் இந்திரகுமார், அவரது மனைவியான தென்னிந்திய நடிகை ரம்பா மற்றும் நொதேர்ன் யுனி பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



